**සජිත් ප්‍රේමදාස, (පා.ම.)**
විපක්ෂ නායක - ශ්‍රී ලංකා පාර්ලිමේන්තුව
**சஜித் பிரேமதாச, (பா.உ.)**
எதிர்க்கட்சித் தலைவர் - இலங்கைப் பாராளுமன்றம்
Sajith Premadasa, (M.P.)
Leader of the Opposition - Parliament of Sri Lanka

2021.09.23

**நள்ளிரவில் ஒரு பெரிய துரோகம் அதாவது கெரவலபிட்டியவை விற்பனை செய்வதை உடன் நிறுத்தவும்.**

அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளுவதற்காக இந்நாட்டு மக்களுக்கு தேர்தலுக்கு முன்பு முன்வைத்த தேசப்பற்று, தேசசக்தி, சனநாயகவாதி போன்ற அனைத்து வாக்குறுதிகளும் கொள்கைகளும் குப்பைக் கூடைக்குள் வீசியுள்ள தற்போதைய அரசாங்கம் அதற்கு முற்றிலும் மாறுபட்ட கொள்கைகளைக் கடைப்பிடித்து முழு நாட்டையும் பாரிய பேரழிவுக்குள் கொண்டு சென்று கொண்டிருக்கின்றது. ஆட்சிக்கு வந்த நாள் தொடக்கம் இற்றைவரை குறிப்பிடத்தக்க மக்கள்சார்பு எந்தவொரு செயற்பாடுகளையும் எடுக்காத இந்த அரசாங்கம் அதற்குப் பதிலாக மக்களின் வாழ்வாதாரத்தை ஆபத்துக்குள்ளாக்கியுள்ளதுடன் நாட்டின் வளங்கள் அனைத்தையும் நள்ளிரவில் விற்பனை செய்ததன் மூலம் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளுவதற்கு முன்னர் சுட்டிக்காட்டிய போலித் தேசப்பற்று இறுதியில் தோலுரித்துக் காட்டப்பட்டுள்ளது.

கடந்த தினம் ZOOM தொழில்நுட்பத்தின் ஊடாக நள்ளிரவில் நடத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தில் தன்னிச்சையாக, வேண்டுமென்றே கெரவலப்பிட்டிய யுகதனவ் மின் உற்பத்தி நிலையம் இந் நாட்டுக்கு இல்லாதாக்கும் தன்னிச்சையான தீர்மானமொன்றை அரசாங்கம் எடுத்துள்ளது.

- ✓ யுகதனவ் என்பது எதிர்வரும் தசாப்தங்களுக்குத் தேவையானவாறு இந்நாட்டில் அமைந்துள்ள பாரிய மின் உற்பத்தி நிலையமாகும் என்பதுடன் மின்சார சபையுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கைக்கு அமைவாக 2035 ஆம் ஆண்டாகும் போது அரச கம்பனிக்கு உரித்தாக உள்ள அனைத்து பங்குகளும் அதாவது யுகதனவ் மின் உற்பத்தி நிலையம் முழுமையாக மின்சார சபைக்கு உரித்தாகவுள்ளதொன்றாகும். எவ்வாறாயினும் தற்பொழுது இந்த பாரிய மின் உற்பத்தி நிலையம் வெளிநாட்டுக் கம்பனிக்கு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைவாக யுகதனவ் மின் உற்பத்தி நிலையம் வெஸ்ட் கோஸ்ட் பவர் கம்பனிக்கு 40% பங்குரிமைக்காக உரிய சட்டரீதியான உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டுள்ளதாக அமெரிக்காவின் நிவ் போட்ரெஸ் எனர்ஜி (New Fortress Energy) கம்பனி உறுதிப்படுத்தியுள்ளது.

- ✓ அதுமாத்திரமன்றி, கெரவலப்பிட்டிய நிர்மாணிப்புக்காக வழங்கப்பட்ட உரிய கம்பனிக்கே எரிவாயு விநியோகத் திட்டமும் வழங்கப்பட்டுள்ளது. மாதாந்தம் அல்லது வருடாந்தம் உரிய எரிவாறு கேள்விகோரலின் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடிய சாத்தியம் இருந்தும் இந்த எரிவாயு விநியோக உரிமையை 05 வருடங்களுக்கு இந்தக் கம்பனிக்கே கேள்வி கோரல் இன்றி வழங்கப்பட்டுள்ளது. இதற்கு அமைவாக இந்த யுகதனவ் மின் உற்பத்தி நிலையத்தின் 40% பங்குரிமை கையளிப்பு உடன்படிக்கையுடன் கேள்வி கோரப்பட்டுள்ள மிதக்கும் எரிவாயு களஞ்சியக் கட்டடத் தொகுதி நிர்மாணிப்பும், குளாய் முறைமை நிர்மாணிப்பும் குறித்த கம்பனியிடமே கையளிக்கப்பட்டுள்ளது.

- ✓ பொறியியலாளர் சங்கம் உட்பட விடயஞ்சார்ந்தவர்களின் கருத்துப்படி இதன் 40% உரிமையை வழங்குவதையும் விட LNG விநியோகத்தை அவர்களிடம் வழங்குவது மிகவும் பாதிப்பாகும் என்றும் நாட்டின் முக்கிய பகுதியின் கட்டுப்பாடு வெளிநாட்டுக் கம்பனியிடம் வழங்குவது நாட்டின் வலுச்சக்தி பாதுகாப்பு ஆபத்துக்குள்ளாவதுடன் எதிர்காலத்தில் குறித்த LNG விநியோகத்துக்கு இடையூறு விளைவிப்பதன் மூலம் நாட்டின் வலுச்சக்தி உற்பத்திக்கு அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கு இதன் மூலம் வெளிநாட்டுக் கம்பனிக்கு முடியுமானது பாரிய ஆபத்தான நிலையாகவும் உருவெடுக்கும்.

- ✓ உலகில் எந்தவொரு நாடும் இயற்கையான எரிவாயு விநியோக கேள்வி கோரல் மற்றும் அதற்குரிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யும் கேள்வி கோரலை ஒருங்கிணைந்து மேற்கொள்ளுவதில்லை என்பதுடன் அவ்வாறு மேற்கொள்ளும் பட்சத்தில் நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கு வலுச்சக்தி பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லை என அந்நாடுகளுக்குத் தெரியும் என்பதனாலாகும்.

- ✓ இந்த எச்சரிக்கையை கவனத்தில் கொள்ளாது இந்நாட்டு அரசாங்கம் எடுத்த இந்த தன்னிச்சையான செயற்பாட்டினால் இந்நாட்டின் வலுச்சக்தி பாதுகாப்பு மாத்திரமன்றி முழு நாட்டையுமே தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் சாத்தியத்தை அவர்கள் கொண்டிருப்பர். அவ்வாறாயினும் அரசாங்கம் இந்த பாரிய எச்சரிக்கையை கவனத்தில் கொள்ளாது இந்நாட்டின் வலுச்சக்தி கொள்கைக்கும் புறம்பாக இந்த உடன்படிக்கையில் ஒப்பமிட்டுள்ளது.

- ✓ மறுபுறம் உரிய பிரேரணையின் பிரகாரம் நாட்டுக்குத் தேவையான மின்சாரத்தில் நூற்றுக்கு 50 விகித உற்பத்தி செய்யும் ஏகபோக உரிமையை வெளிநாட்டு தனியார் கம்பனிக்கு கிடைக்கின்றது. இதற்கு முன்னர் கேள்வி கோரப்பட்டு மதிப்பீடு செய்து இறுதித்தருவாயில் உள்ள சந்தர்ப்பத்தில் அதனை இல்லாதொழித்து இந்தக் கம்பனிக்கு வழங்கியதன் காரணம் என்ன என்பதை இதற்கு முன்னர் கேள்விகள் முன்வைக்கப்பட்டிருந்ததும் வெளி நாடுகள் கேள்விகளை எழுப்பக்கூடும் என்பதனால் இதன் ஊடாக இராஜதந்திர உறவுகளுக்கு ஏற்படக்கூடிய வாய்ப்புகள் பாதிப்புகள் பற்றியதான பதிலை அரசாங்கத்திடம் நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

ஹெஜின் உடன்படிக்கை போன்ற பாரிய துரோகம் இந்த உடன்படிக்கையின் ஊடாகவும் மேற்கொள்ளப்படுவதுடன் இவ்வாறான துரோகம் இலங்கை குடிமகனுக்கு ஒருபோதும் ஏற்படக்கூடாது.

இவ்வாறான பாதிப்புமிக்க உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடும் போது அமைச்சரவை வெறுமனே மின்சாரக் கம்பம் போன்று உணர்வின்றிஇருப்பதுடன் இதற்கு எதிராக பொறுப்பு வாய்ந்த தலையீடுகளை மேற்கொள்ளாததால் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலைமை இதனூடாக அறிந்து கொள்ள முடியும். இருப்பினும் இதிலுள்ள எந்த ஒருவரும் இந்த பாரிய துரோகத்தின் பங்குதாரராகும் குற்றத்தில் இருந்து விடுபட முடியாது.

நிலப்பரப்பில் சிறிய நாடொன்றில் வலுச்சக்திக் கட்டுப்பாடு மற்றும் உரிமையைப் பெற்றுக் கொள்ளும் எந்தவொரு வெளித்தரப்பாக இருத்தாலும் நாட்டின் நிருவாகத்தை நிருவகிக்கும் அதிகாரம் கிடைக்கும் என்பதை அறிந்து கொள்ளக்கூடிய சுயசிந்தனை இல்லாது உணர்விழந்துள்ள அரசாங்கத்துக்கு தெரிய வாய்ப்பில்லை இருந்த போதிலும் ஐக்கிய மக்கள் சக்தி உட்பட இந்நாட்டின் மொத்த மக்களுக்கும் அரசாங்கத்தின் இந்த தன்னிச்சையான செயற்பாட்டுக்கு எதிராக இணைந்து கொள்வார்கள் எனத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**சஜித் பிரேமதாச**
எதிர்க்கட்சித் தலைவர்

අංක 30, ශ්‍රීමත් මාකස් ප්‍රනාන්දු මාවත, කොළඹ 07.
இலக்கம் 30, சேர் மாகஸ் பெர்ணாந்து மாவத்தை, கொழும்பு 07.
No. 30, Sir Marcus Fernando Mawatha, Colombo 07.

දුරකතන / தொலைபேசி / Telephones: 011 2777253, 011 2699171
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 2699174
විද්‍යුත් තැපෑල / மின்னஞ்சல் / E-mail: sajitli _p@ dialogsl.Net